அதற்கு எல்லா உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பும் தேவை என்பதற்காகத்தான் இதை எடுத்துச் சொல்கின்றேன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 9–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிறைய உறுப்பினர்கள் கவன ஈர்ப்பு அறிவிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். ஒரே subject–லேயே பேசிக்கொண்டிருந்தால், நேரம் வீணாகிறது. எல்லோரும் உட்காருங்கள்.

2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்—தொடர்ச்சி

(ஆ) மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் திறந்து விடுதல் குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள்; அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் பின்வரும் அறிக்கையினை அவையில் படித்தளிக்க தங்களின் மேலான அனுமதியினைக் கோருகிறேன்.

கர்நாடகா மற்றும் கேரளாவின் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்துவரும் கன மழையினால் மேட்டூர் அணைக்குக் கடந்த ஒரு வார காலமாக நீர் வரத்து அதிகரித்துள்ளது. ஜூலை 14 ஆம் தேதி 60 அடியாக இருந்த நீர் மட்டம், நேற்று (20–7–2009) 81 அடியாக உயர்ந்துள்ளது. நேற்றைய நிலவரப்படி மேட்டூர் அணைக்குச் சுமாராக வினாடிக்கு 60 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. இந்நிலை தொடருமானால், இன்னும் இரண்டு வாரங்களில் அணையின் நீர் மட்டம் 90 அடியைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, காவிரி டெல்டா பகுதியில் சம்பா சாகுபடிக்காக மேட்டூர் அணையிலிருந்து 7–8–2009 (வெள்ளிக்கிழமை) முதல் பாசனத்திற்காகத் தண்ணீர் திறந்து விடப்படும் என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனைக் கருத்திற்கொண்டு, காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் வேளாண் தொடக்கப் பணிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.